From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 25/2019

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜன் | Father/Husband Name | : மலைச்சாமி |
| Age | : | Calling | : |
| Date | : 12.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 12 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் அரும்பனூர் புதுாரில் குடியிருந்து வருகிறேன். நான் வல்லாபா வித்யாலயா பள்ளியில் டிரைவராக பணிபுரிகிறேன். பட்டியல் சாட்சி 2 மலைச்சாமி எனது தாத்தா, அவர் கொரானா கால கட்டத்தில் இறந்துவிட்டார். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். 1வது எதிரியின் மதுரை வேளாண்மை கல்லூரி பின்புறம் 3,1/2 சென்ட் நிலம் சுந்தரியின் பெயரில் இருந்தது. நான் அதை வாங்குதற்காக ரூ.2,1/2 லட்சம் முன்பணமாக கொடுத்தேன். வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எழுதி வாங்கினேன். சுந்தரிதான் எழுதி கொடுத்தார். அதில் எனது தாத்தா மலைச்சாமி சாட்சி கையொப்பம் செய்தார். அந்த இடத்தை எனக்கு மேற்படி எதிரிகள் முண்பணம் பெற்றுக்கொண்டு எனக்கு கிரையம் செய்யாமல் வேறு நபருக்கு விற்றுவிட்டனர். மேற்படி இடத்தின் அசல் ஆவணம் என்னிடம் கொடுத்துவிட்டு எனக்கு தெரியாமல் வேறு நபர்களுக்கு கிரையம் செய்துவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒளிநகல் பத்திரத்தின் அசல்தான் என்னிடம் கொடுத்து வைத்திருந்தனர். அதனால் நான் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் நடந்த விவரத்தை புகார்

மூலமாக அளித்தேன். மதுரை மாவட்ட காவல் கண்ணாகாணிப்பாளரிடமும் புகார் கொடுத்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளிடம் கொடுத்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் மனு அசாஆ1 ஆக குறியீடு செய்யயப்படுகிறது. ).**

மேற்படி இடத்தின் அசல் ஆவணத்தை தற்போது என்னிடம் எதிரிகள் பெற்றுக்கொண்டு ரூ.1,80,000/– யை கொடுத்துள்ளனர். நான் கிரைய ஒப்பந்தம் செய்த அசல் ஆவணத்தை எதிரிகளிடம் தற்போது கொடுத்துவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

எந்த எதிரிக்கும் எனக்கும் கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் 1ம் எதிரி சுந்தரிக்கும், எனக்கும் இடையே கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் செய்து எத்தனை வருங்களுக்கு பின்னர் கிரைய ஒப்பந்தத்தை பதிவு செய்ய சொல்லி கேட்டேன் என்றால் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு 2 மாதங்களிலிருந்தே பதிவு செய்து தர சொல்லி கேட்டேன். அவ்வாறு கிரைய செய்து தர சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிகளுக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. வேறு எவ்வாறு கிரையம் செய்ய நான் முயற்சி செய்தேன் என்றால் எதிரிகளை அழைத்து பேசினேன், ஆனால் அவர்கள் ஒத்துழைக்கவில்லை. அதன் பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்களா என்றால் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். அங்கு என்னிடம் என்ன சொல்லப்பட்டது என்றால்

காவல் நிலையத்தில் என்னை விசாரித்து நீதிமன்றத்தின் மூலம் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்ய சொன்னார்கள்.

2) என்னிடம் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தால் அதிகபட்சமாக நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்பதால் நான் முதல்தகவல் அறிக்கை காவல் துறைமூலமாக பணம் கொடுத்து பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் கிரைய ஒப்பந்தத்தை அசலை நீதிமன்றத்த்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது நான் எதிரிகளுடம் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான் ரூ.1,80,000/- பெற்றுக்கொண்டேன், மீத தொகைக்கு 1ம் எதிரியின் மகனான ரமேஷ் என்பவரிடம் ரூ.70,000/- காசோலையாக கொடுத்தார். காசோலையை எத்தனை வருங்களுக்கு முன்னர் கொடுத்தார் என்றால் சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் கொடுத்தார். அந்த காசோலை வங்கியில் வசூலுக்கு செலுத்தினேனா என்றால் இல்லை. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை, எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியவை என்றால் சரியல்ல.

**அரசுதரப்பில் மறுவிசாரணை**

1ம் எதிரியின் மகனான 3 வது எதிரி ரமேஷ் கொடுத்த காசோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயார் என்றால் சரிதான்.